ஒஎஸ்.எண்.20/2012 அய்யம்மாள் (வா.சா.1)

குறுக்குவிசாரணை தொடர்ச்சி (2 முதல் 9,11,12 பிரதிவாதிகள் தரப்பில்)08.03.2019

எனது தாயார் உயிருடன் இருந்த காலம்வரை அவரது குடும்ப அட்டையை அவர்மட்டும் தான் பயன்படுத்தி வந்தாரா என்றால் அதுபற்றி தெரியாது. ஆனால் பிரதிவாதிகள் அந்த குடும்ப அட்டையை பயன்படுத்தி வரவில்லை என்றால் தம்பி பயன்படுத்தினார்கள். அம்மாதான் பயன்படுத்தியது எனக்குதெரியாது. எங்கள் தம்பிமார்கள்அந்த குடும்ப அட்டைய பயன்படுத்தியதற்கு எனது அம்மா எந்த ஆட்சேபணையும் இறக்கும்வரை சொல்லவிலலை என்றால்சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தாயார் குடும்ப அட்டை எண்.28/G/0390025 என அடையாளம் காட்டி பத்திர பதிவு செய்துள்ளார் என்றால் அந்த குடும்ப அட்டையை பற்றி எனக்குதெரியாது. அந்த குடும்ப அட்டை யாரிடம் உள்ளது என்று எனக்குதெரியாது. குடும்ப அட்டை எனது தாயாரின் பேரில்தான் இருந்து வந்தது என்றும், அதனால் தான் எனது தாயார் மனமுவந்து குடும்பஅட்டையை பயன்படுத்தி அடையாளம்காட்டி மேற்படி ஆவணத்தை பதிவு செய்தார் என்றால் சரியல்ல. பிராது 1ம் தபசில் 29வது அயிட்டசொத்தானது வீடு ஆகும். அந்த வீடு ஆவல்நத்தம் கிராமத்தில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் மேற்படி வீட்டிற்கு கொடுத்த பட்டா என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகும். நான் கடந்த 30ஆண்டுகளாக பாளையங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் 30 ஆண்டுகளுக்கு முன்பே பொதுகுடும்பத்திலிருந்து விலகி சென்றுவிட்டதால்தான் பெண் மக்கள் யார்பேரிலும் பட்டா ஏற்படாமல் ஆண்மக்கள் பெயரில் பி.வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டது என்றால்சரியல்ல. நான் பிராதில் கேட்டுள்ள பரிகாரம்படி எனக்கு பாகம் கிடைக்ககூடியதல்ல என்றால்சரியல்ல. 1 முதல் 9 மற்றும் 11,12 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கைபடி அவர்களுக்கு பங்கு கிடைக்கவேண்டியது சரியானது என்றுசொன்னால் அவர்களுக்கு பங்குகொடுக்க கூடாது. இந்த பிரதிவாதிகளுக்கு பங்கு கொடுக்ககூடாது என்பதற்காகத்தான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல்செய்துள்ளேன் என்றால்சரியல்ல. பிராதுபடி எனக்கு பாகம் கிடைக்ககூடியதல்ல என்றால்சரியல்ல.

*(கு.வி. 14வது பிரதிவாதி தரப்பில் காலஅவகாசம் கேட்டதன்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஓம்)*A.K.பாபுலால்,
*சார்பு நீதிபதி,*
கோவில்பட்டி.